<u>சுருக்கம்</u>

பள்ளிக்கல்வி – அனைவருக்கும் கல்வி இயக்ககத்தின் கீழ், மாநில மற்றும் மாவட்ட திட்ட அலுவலகங்கள், வட்டார மற்றும் தொகுப்பு வள மையங்களில் பணிபுரியும் 3890 ஆசிரியர் பயிற்றுநர் பணியிடங்களில் தற்போதைய மாநில காலிப்பணியிட சராசரியான 15%-ஐ அனைத்து மாவட்ட மற்றும் வட்டார வளமையங்களுக்கும் பொதுவான காலிப்பணியிடமாக ஒதுக்கிவிட்டு, பொது கலந்தாய்வின் மூலம் பணி நிரவல் செய்து அனைத்து மாவட்டங்களுக்கும் மாறுதல் வழங்கி பொதுக் கலந்தாய்வு நடத்த அனுமதி –ஆணை – வெளியிடப்படுகிறது.

---

<u>பள்ளிக்கல்வித் (ப.க.3(2)) துறை</u>

அரசாணை (1டி) எண். 556

நாள்: 09.08.2018
விளம்பி வருடம், ஆடி 24
**திருவள்ளுவராண்டு 2049**

படிக்கப்பட்டது:-

1. அரசாணை (1டி) எண். 652, பள்ளிக்கல்வி (ப.க.3(2)) துறை நாள் 31.10.2017
2. அரசாணை (1டி) எண். 751, பள்ளிக்கல்வி (ப.க.3(2)) துறை நாள் 12.12.2017
3. அரசாணை (1டி) எண். 403, பள்ளிக்கல்வி (பக5(1))த் துறை, நாள் 29.05.2018
4. மாநில திட்ட இயக்குநரின் கடிதம் ந.க.எண் 1993/B7/BRTE Estt, / SSA/ 2018-19, நாள் 22.06.2018.

<u>ஆணை:–</u>

மேலே முதலாவதாக மற்றும் இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணைகளின்படி அனைவருக்கும் கல்வி இயக்ககத்தில் பணியாற்றும் ஆசிரியர் பயிற்றுநர்களுக்கு பணி மாறுதல் மற்றும் பொது மாறுதல் கலந்தாய்வு நடைபெற ஆணைகள் வெளியிடப்பட்டன.

2. மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், அனைவருக்கும் கல்வி இயக்கக மாநில திட்ட இயக்குநர், 23.02.2018 அன்று 350 ஆசிரியர் பயிற்றுநர்கள், பட்டதாரி ஆசிரியர்களாக பணி மாறுதல் பெற்று சென்று விட்டனர் எனவும், மேலும், 18.06.2018 அன்று நடைபெற்ற கலந்தாய்வின் வாயிலாக 103 ஆசிரியர் பயிற்றுநர்கள் பணி மாறுதல் மூலம் சென்று விட்டனர் என்றும், இதனால் மொத்தமுள்ள 4587 பணியிடங்களில், 594 ஆக இருந்த காலிப்பணியிடம் மேலும் அதிகரித்து தற்போது 697 ஆக உள்ளது என்றும் இதனால், ஆசிரியர் பயிற்றுநர்களின் எண்ணிக்கை 3890 ஆக குறைந்து மாநிலம் தோறும் சமநிலையற்று காணப்படுகிறது என்றும் குறிப்பிட்டுள்ளார். மேலும், அனைவருக்கும் கல்வி இயக்ககத்தின் கீழ், பணிபுரியும் 3890 ஆசிரியர் பயிற்றுநர் பணியிடங்களில், தற்போதைய மாநில காலிப்பணியிட சராசரியான 15%-ஐ, அனைத்து மாவட்ட மற்றும் வட்டார வளமையங்களுக்கும் பொதுவான காலிப்பணியிடமாக ஒதுக்கிவிட்டு, பொது கலந்தாய்வின் மூலம் பணி நிரவல் செய்து, அனைத்து மாவட்டங்களுக்கும் மாறுதல் வழங்கி, பொதுக் கலந்தாய்வு நடத்திட அனுமதி கோரியுள்ளார்.

3. அனைவருக்கும் கல்வி இயக்கக மாநில திட்ட இயக்குநரின் கருத்துருவினை ஆய்வு செய்யப்பட்டதன் அடிப்படையில், மாநில திட்ட இயக்குநர் தெரிவித்துள்ளபடி தற்போது மொத்தமுள்ள 3890 ஆசிரியர் பயிற்றுநர் பணியிடங்களில் தற்போதைய மாநில காலிப்பணியிட சராசரியான 15%-ஐ, அனைத்து மாவட்ட மற்றும் வட்டார வளமையங்களுக்கும் பொதுவான காலிப்பணியிடமாக ஒதுக்கிவிட்டு, மேற்குறிப்பிட்டவாறு மாநில சராசரி காலிப்பணியிடங்களை தவிர்த்து அதற்கு மேற்பட்டு வருகின்ற காலிப்பணியிடங்களையும், மூன்று ஆண்டுகளுக்கு மேல் மாவட்டத்தில் ஒரே இடத்தில் பணிபுரியும் பணியாளர்களின் பணியிடங்களையும் காலிப் பணியிடங்களாக கணக்கில் கொள்ளப்பட்டு மாறுதல் வழங்கிட பொதுக் கலந்தாய்வு நடத்திட அனுமதி வழங்கலாம் என்றும் மேலும், ஆசிரியர் பயிற்றுநர் பணியிடமும், பட்டதாரி ஆசிரியர் பணியிடமும் ஒத்த பணியிடம் என்பதால் பொது மாறுதல் / பணிநிரவலின் போது அரசாணை (1டி) எண். 403, பள்ளிக்கல்வி (பக5(1))த் துறை, நாள் 29.05.2018ல் ஆசிரியர் பொது மாறுதலின் போது கடைபிடிக்க வேண்டிய பொதுவான நெறிமுறைகள் குறித்து வெளியிடப்பட்ட ஆணைகளை இந்நேர்விற்கும் கடைபிடிக்க அரசு முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பிரதீப் யாதவ்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை – 6
அனைவருக்கும் கல்வி இயக்ககம், சென்னை – 6
இயக்குநர், மாநில கல்வியியல் ஆராய்ச்சி
மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை –6

<u>நகல்:</u>
மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை
அமைச்சரின் அலுவலகம், சென்னை –9
அரசு முதன்மைச் செயலாளரின் முதுநிலை
முதன்மை தனிச்செயலர், பள்ளிக்கல்வித்துறை,
சென்னை – 9
இருப்புக்கோப்பு/உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

09/08/18
பிரிவு அலுவலர்